අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112785818
info@moe.gov.lk www.moe.gov.lk

මගේ යොමුව / எனது இல. / My Ref. ED/9/9/1/66 ඔබේ යොමුව / உமது இல. / Your Ref. දිනය / திகதி / Date 2019.10.

**சுற்றறிக்கை இல: 42/2019**

சகல மாகாணக் கல்விச் செயலாளர்கள்,
மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்,
வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,
கோட்டக் கல்விப் பிரதி /உதவிக் கல்விப் பணிப்பாளர்கள்,
ஆரம்பக் கல்வி வகுப்புக்களைக் கொண்ட சகல பாடசாலைகளினதும் அதிபர்கள்.

## 2020 ஆம் வருடத்திலிருந்து தரம் ஐந்திற்கான புதிய பாடத் திட்டத்தை நடைமுறைப்படுத்தல்

**1998** ஆம் வருடத்திலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் ஆரம்பக் கல்வி மறுசீரமைப்பு மற்றும் **2007** ஆம் வருடத்திலிருந்து நடைமுறைப்படுத்தப்படும் ஆரம்பக் கல்வி நவீன மயமாக்கலை மேலும் வலுவாக நடைமுறைப்படுத்துவதை நோக்காகக் கொண்டு தரம் ஐந்திற்காகத் தற்போது பயன்படுத்தப்படும் பாடத்திட்டம், ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி, பாடநூல்கள் மற்றும் செயல்நூல்கள் ஆகியன 2020 ஆம் வருடத்திலிருந்து நடைமுறைப்படுத்தப்படும் வகையில் மீள்திருத்தம் செய்யப்பட்டுள்ளன. இதற்கமைய ஆரம்பக் கல்வி மறுசீரமைப்பின் கீழ் வெளியிடப்பட்டுள்ள **2008/49** இலக்கமும் **2008.12.05** திகதியுமிடப்பட்ட சுற்றுநிருபத்தின் **1,6,7,8** மற்றும் **10** ஆகிய இலக்கங்கள் கீழ்வருமாறு மீள்திருத்தம் செய்யப்பட்டுள்ளதுடன் இச்சுற்றுநிருபம் **2020.01.01** ஆம் திகதியிலிருந்து வலுவாக நடைமுறைப்படுத்தப்படும்.

i. இல **1 - 2020** ஆம் வருடத்திலிருந்து தரம் ஐந்திற்காகத் திருத்தம் செய்யப்பட்ட பாடத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

ii. இல **6,7** மற்றும் **8** - இதுவரை பயன்படுத்தப்பட்டுவந்த தரம் ஐந்திற்கான பாடத்திட்டம் மற்றும் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிக்குப் பதிலாக மாற்றம் செய்யப்பட்ட புதிய பாடத்திட்டம் மற்றும் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி 2020 ஆம் வருடத்திலிருந்து நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

iii. இல **10** - இப் புதிய பாடத்திட்டம் மற்றும் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிக்கு அமைவாக கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள தரம்

ගරු අමාත්‍යතුමා / கௌரவ அமைச்சர் / Hon. Minister
+94112784832
+94112784825
minister.education@moe.gov.lk

ලේකම් / செயலாளர் / Secretary
+94112784811
+94112785162
secretary.education@moe.gov.lk

இதற்கு மேலதிகமாக **2008.12.05** ஆம் திகதி வெளியிடப்பட்ட இலக்கம் **2008/49** இலக்கச் சுற்றுநிருபத்திற்கு இல **12** மற்றும் **13** என்றவாறு புதிய ஆலோசனைகள் கீழ்வருமாறு உள்ளடக்கப்பட்டுள்ளன.

12. **2020** ஆம் வருடத்திலிருந்து நடைமுறைப்படுத்தப்படும் தரம் ஐந்திற்கான புதிய பாடத் திட்டத்திற்கமைவான கணிப்பீட்டு உபகரணங்களைப் பயன்படுத்தியே மாணவர் முன்னேற்றம் கணிப்பீடு செய்யப்பட வேண்டும். முதன்மை நிலை மூன்றிற்கான அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சிகளை முதன்மை நிலை மூன்றிற்குப் புதிதாக அறிமுகம் செய்யப்படுகின்ற ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியில் உள்ளடக்கப்பட்டுள்ள ஆலோசனைகளுக்கேற்ப நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

13. தரம் ஐந்திற்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய பாடத் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் போது மாணவர்களுக்கு வீட்டு வேலைகள் வழங்குவதைக் குறைத்தல் வேண்டும். வார நாட்களில் வீட்டு வேலைகள் அத்தியாவசியமான சந்தர்ப்பத்தில் மாத்திரம் வழங்கப்பட வேண்டுமென்பதுடன், வார இறுதி நாட்களில் வீட்டு வேலைகள் மிகவும் வரையறுக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் மாத்திரமே வழங்கப்பட வேண்டுமென்பதையும் கவனத்திற்குத் தருகிறேன்.

எம்.என்.றணசிங்ஹ

செயலாளர்

கல்வி அமைச்சு

பிரதிகள்,:- 01. பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவகம் - அ.கொ.பொ

02. ஆணையாளர் நாயகம், இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் - அ.கொ.பொ

03. ஆணையாளர் நாயகம், கல்வி வெளியீட்டுத் திணைக்களம் - அ.கொ.பொ